**2018ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 14.02.2018ம் நாள் புதன் கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை : திரு. வே.கிருஷ்ணகுமார், டி.சி.இ.,**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**

**பொருள் எண் : 1**

இந்நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்களின் ஜனவரி 2018ம் மாத நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பதிவு செய்யலாம்

**பொருள் எண் : 2**

தமிழ்நாடு சட்டம் 23/2017 மற்றும் தமிழ்நாடு மறுவரையறை ஆணையம் ஒழுங்குமுறைகளின்படி 2011ம் வருட மக்கள் தொகை கணக்கெடுப்பினை அடிப்படையாக கொண்டு இந்நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகள் மறுவரையறை செய்யப்பட்டது. வார்டு மறுவரையறைக்கான வரைவு கருத்துரு தயார் செய்து வரைபடங்கள், படிவங்கள் மற்றும் சான்றுகளுடன் உரிய வழிமுறையாக மறுவரையறை ஆணையத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஆணையத்தின் பரிசீலனைக்கு பின், பொதுமக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் ஆலோசனைகள், ஆட்சேபனைகள் தெரிவிக்க கோரி தினசரி நாளிதழ், நகராட்சி மற்றும் அரசு அலுவலகங்களில் அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து வார்டு எண் 30, 31 மறு வரையறை செய்தது தொடர்பாக வரப்பெற்ற மனு பரிசீலனை செய்யப்பட்டு மாவட்ட மறுவரையறை அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன்படி இறுதி வார்டு மறுவரையறை கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளதையும், மறுவரையறை ஆணையத்திற்கு உரிய வழிமுறையாக பிரேரணை அனுப்பி வைக்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 3**

இந்நகராட்சியின் வார்டு வரையறை பணி மேற்கொண்டதின் இறுதி அறிக்கை மாநில தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க தேவையான வார்டு வரைபடம் நகர வரைபடம் தயார் செய்து பைண்டிங் செய்தமைக்கும், கணினி டோனர் ரீபில் செய்தமைக்கும், வாக்காளர் பட்டியல் கணக்கெடுப்பு படிவம் 55 எண்ணிக்கை பைண்டிங் செய்தமைக்கும் மேற்கொண்ட செலவினம் ரூ.22725/–ஐ MAK பவர் பிரஸ் நிறுவனத்துக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி MAK பவர் பிரஸ் நிறுவனத்தின் மூலம் பணிமேற்கொண்டதையும், தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 4**

இந்நகராட்சி பதிவறையில் இருந்த கோப்புகள் அடுக்கி வைக்கும் ரேக்குகள் உயரமாக உள்ளதால் மேல் மாடியில் உள்ள பதிவறைக்கு எடுத்து செய்ய இயலாமல் உள்ளது. மாடியில் வைக்கும் வகையில் ரேக்குகள் அறுத்து பழுதாகி உள்ள ரேக்குகளை சரிசெய்து கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.10000/–ற்கும் இப்பணியினை அவசர அவசியம் கருதி இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.டி.எஸ்.ஜப்பார் என்பவர் மூலம் செய்து கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அவசர அவசியம் கருதி திரு.டி.எஸ்.ஜப்பார் அவர்கள் மூலம் மேற்கொள்ளவும், பணிக்கான தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 5**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டுகளை மறுவரையறை செய்யும் பணிக்கு தேவையான எழுதுபொருட்கள் வாங்கியமைக்கும், அலுவலக பயன்பாட்டிற்கு தினசரி நாளிதழ் வாங்கியமைக்கும் மற்றும் வாக்காளர் பட்டியல் வீடு வீடாக கணக்கெடுக்கும் பணிக்கு தேவையான படிவங்கள், ஜெராக்ஸ் எடுத்தமைக்கும், மேற்கொண்ட செலவினம் ரூ.7600/– ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

வார்டு மறுவரையறை மற்றும் தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொண்டமைக்கு மேற்கொண்ட செலவினம் ரூ.7600/– வழங்க அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 6**

அரசாணை எண் 83, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 14.07.2014–ன்படி தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தில் சாலை ஓர வியாபாரிகளுக்கு இடம் ஒதுக்கீடு செய்து கொடுக்கவும், சாலை ஓர வியாபாரிகளை கண்டறிந்து கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. கணக்கெடுப்பாளர்களுக்கு இந்நகராட்சிக்குட்பட்ட வார்டுகளின் வரைபடம், மற்றும் ஒருங்கிணைந்த நகர வரைபடம் தயார் செய்து வழங்கிய நிறுவனமாக ஆர்.சி.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் நிறுவனத்துக்கு ரூ. 11020/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அவசர அவசியம் கருதி இப்பணி மேற்கொண்டதையும், வரைபடம் தயார் செய்து வழங்கிய நிறுவனத்திற்கு தொகை ரூ.11020/– வழங்கவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 7**

உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை, தருமபுரி அவர்கள் தருமபுரி நகராட்சியின் 2016–2017ம் ஆண்டுக்கான வருவாய் (ம) மூலதன நிதி, குடிநீர் நிதி, கல்வி நிதிக்கான தணிக்கை தொடங்கப்பட்டு முடிவுற்றுள்ளது. மேற்கண்ட நிதிகளுக்கான கணக்குகளை திரு.ஜெ.கிருஷ்ணமூர்த்தி கன்சல்டெண்ட் மூலம் முடித்துக் கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே வருவாய் நிதி, மூலதனநிதி, குடிநீர்நிதி மற்றும் கல்வி நிதி கணக்குகளை திரு.ஜெ.கிருஷ்ணமூர்த்தி கன்சல்டெண்ட் மூலம் முடித்து தணிக்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

மூன்று நிதிக்கான கணக்குகள் முடித்தமைக்கு திரு.ஜெ.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தொகை ரூ,45000/–ஐ வழங்க கோரியுள்ளார். எனவே மேற்கண்ட தொகை வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 8**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN29AM7501 டிப்பர் லாரிக்கு Engine Head மற்றும் ரேடியேட்டர் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் விலைப்புள்ளி கோரியதில் 19.12.2017ம் தேதியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | ஜோசப் ஆட்டோ கேரேஜ் | Rs.26,500/- |
| 2. | அஜ்மிர் ஆட்டோ கேரேஜ் | Rs.27,550/- |
| 3. | ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ் | Rs.26,200/- |

**அலுவலகக்குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.3ல் கண்டுள்ள ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ், தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 9**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN29AM7502 லாரிக்கு தகுதி சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளதால் வாகனத்தின் பழுதினை சரி செய்யும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் விலைப்புள்ளி கோரியதில் 24.01.2018ம் தேதியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | ஜோசப் ஆட்டோ கேரேஜ் | Rs.65,000/- |
| 2. | அஜ்மிர் ஆட்டோ கேரேஜ் | Rs.62,600/- |
| 3. | ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ் | Rs.57,100/- |

**அலுவலகக்குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.3ல் கண்டுள்ள ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ், தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 10**

இந்நகராட்சியின் 2017–2018ம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்ட அறிக்கை மற்றும் 2018–19ம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டு அறிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

1. 2017–18 வருவாய் நிதி மற்றும் மூலதனநிதி (திருத்திய வரவு செலவு திட்ட அறிக்கை)
2. 2017–18 குடிநீர் வடிகால் நிதி மற்றும் மூலதனநிதி (திருத்திய வரவு செலவு திட்ட அறிக்கை)
3. 2017–18 கல்வி நிதி மற்றும் மூலதனநிதி (திருத்திய வரவு செலவு திட்ட அறிக்கை)
4. 2018–19 வருவாய் நிதி மற்றும் மூலதனநிதி
5. 2018–19 குடிநீர் வடிகால் நிதி
6. 2018–19 கல்வி நிதி

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 11**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN29D5924 லாரிக்கு தகுதி சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளதால் வாகனத்தின் பழுதினை சரி செய்யும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் விலைப்புள்ளி கோரியதில் 24.01.2018ம் தேதியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | ஜோசப் ஆட்டோ கேரேஜ் | Rs.49,300/- |
| 2. | அஜ்மிர் ஆட்டோ கேரேஜ் | Rs.51,100/- |
| 3. | ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ் | Rs.45,500/- |

**அலுவலகக்குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.3ல் கண்டுள்ள ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ், தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 12**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஓராண்டு உரிம இனங்கள் ஓராண்டிற்கு ஏலம் விடப்பட்டு, முதலாம் ஆண்டின் ஏலத் தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து இரண்டாம் ஆண்டிற்கும், மூன்றாம் ஆண்டிற்கு இரண்டாம் ஆண்டின் ஏலத் தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து வசூல் செய்யப்படவேண்டும். அதன் அடிப்படையில் கீழ்கண்ட ஓராண்டு இனங்கள் 31.3.2018 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. எனவே இந்நகராட்சிக்கு சொந்தமான ஓராண்டு உரிம இனங்கள் 2018–2019 ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டு காலத்திற்கு கீழ்காணும் இனங்களை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும், பொது ஏலம் மற்றும் ஏலத்திற்கான ஏல நிபந்தனைகள் மற்றும் துணை விதிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. வாரச்சந்தை சுங்க வசூல்
2. தினசரி காய்கறி மார்கெட் சுங்க வசூல்
3. நகர பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் (தென்கிழக்கு) சுங்க வசூல்
4. ஆடு அடிக்கும் தொட்டி சுங்க வசூல்
5. மீன்மார்கெட் சுங்க வசூல்
6. நகரபேருந்து நிலைய சைக்கிள் நிலையம் சுங்க வசூல்
7. புறநகர பேருந்து நிலைய தொலைகாட்சி வர்த்தக விளம்பரம் உரிமம்
8. புறநகர பேருந்து நிலைய வர்த்தக ஒலிபெருக்கி விளம்பரம் உரிமம்
9. பொருள் பாதுகாப்பு அறை கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
10. புறநகர பேருந்து நிலைய எடைபார்க்கும் இயந்திரம்–வடபுறம்
11. புறநகர பேருந்து நிலைய எடைபார்க்கும் இயந்திரம்–தென்புறம்

**அலுவலகக்குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 13**

தருமபுரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 25 சாலை வினாயகர் சாலையில் நகராட்சிக்கு சொந்தமான அங்கன் வாடி மையம் செயல்பட்டு வருகின்றது. இந்த அங்கன்வாடி மைய கட்டிடத்தில் தண்ணீர் கசிவு ஏற்பட்டு அரிசி, பருப்பு மற்றும் சமையல் பொருட்கள் அனைத்தும் நனைந்து பயன்படுத்த முடியாத நிலையில் ஏற்படுவதால் மேற்கண்ட அங்கன்வாடி மைய கட்டிடத்தினை சரி செய்து தருமாறு ஒருங்கிணைப்பாளர் நேரடியாக கோரிக்கை வைத்ததால் அங்கன்வாடி மைய கட்டிடத்தினை பழுது நீக்கம் செய்ய ஏற்படும் செலவின தொகை ரூ.1.50 லட்சம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 14**

தருமபுரி நகராட்சி எல்லைக்குட்பட்ட அம்பேத்கார் தெருவில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைந்துள்ள இடத்தில் எந்த ஒரு பாதுகாப்பும் இல்லாததால் இரவில் சமூக விரோதிகள் அத்துமீறி உள்ளே செல்வதால் அங்கு குடிநீர் பணிகள் மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு போதுமான பாதுகாப்பு இல்லாததால் மேற்கண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு சுற்றுசுவரின் உயரம் அதிகப்படுத்துதல் மற்றும் நுழைவாயில் அமைக்கும் பணியினை மேற்கொள்வதால் சமூக விரோதிகளின் நடமாட்டம் கட்டுப்படுத்த முடியும். எனவே, மேற்கண்ட பணியினை ரூ.3.70 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 15**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 26, எஸ்.வி. ரோட்டில் வசந்தபவன் ஓட்டல் அருகில் மழைநீர் கால்வாய் அமைத்துதர கோரியுள்ளார். எனவே, மேற்கண்ட இடத்தினை ஆய்வு செய்ததில் மழைக் காலங்களில் மழைநீர் வெளியேறாமல் தேங்கி இருப்பதால் பொது மக்களுக்கு இடையூராக இருப்பதால் மேற்கண்ட இடத்தில் மழை நீர் கால்வாய் அமைக்கும் பணி அவசியம் என்பதால் அதற்காக ஏற்படும் செலவினத் தொகை ரூ.1.80 லட்சம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 16**

தருமபுரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 4ல் சந்தைபேட்டையில் புதியதாக நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் ரூ லட்சம் மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. தற்போது பயன்பாட்டில் உள்ளது. 15.02.2018 அன்று நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தின் மருத்துவர் நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளர் அவர்களை நேரில் சந்தித்து சுகாதார நிலையத்தில் பணிபுரியும் பணியாளர்களின் பாதுகாப்பு கருதி நுழைவாயில் கேட் மற்றும் ஆர்ச் அமைத்தும் குடிநீர் வசதிகள் மற்றும் தரைதளம் அமைத்து தருமாறு கோரியதின் பெயரில் மேற்கண்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிகள் மேற்கொள்ள ஏற்படும் செலவின தொகை ரூ.4.00 லட்சம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 17**

தருமபுரி நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு பென்னாகரம் ரோட்டில் பழைய துப்புரவு பணியாளர் குடியிருப்பினை இடித்துவிட்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் 24 எண்ணிக்கை புதிய துப்புரவு பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தில் பணியாளர்களுக்கு குடியிருப்பு மட்டுமே கட்ட அனுமதிக்கப்பட்டது. மின் இணைப்புகள், மின் விசிரிகள், மின் விளக்குகள் மற்றும் பேனல் போர்டுகள் அமைக்க நிதி ஒதுக்கப்படவில்லை. தற்போது குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு 07.10.2017 அன்று நடைபெற்ற மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட குடியிருப்புகளை உரிய பணியாளர்களுக்கு ஒப்படைக்க வேண்டியிருப்பதால் மேற்கண்ட பணிகளை செய்ய ஏற்படும் செலவினத் தொகை ரூ.3.20 லட்சம் மதிப்பீட்டில் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 18**

தருமபுரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 30 ஜி.எம். தியேட்டர் அருகில் 10 எண்ணிக்கை புதிய கடைகள் கட்டப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடைகளுக்கு முன்பு மழைநீர் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. இந்த கால்வாய்களுக்கு கவர் சிலாப் அமைத்தால் மட்டுமே மேற்கண்ட கடைகளை ஏலம் விடப்பட முடியும். எனவே, மேற்கண்ட கடைகளுக்கு முன்பு உள்ள மழைநீர் கால்வாய்க்கு கவர் சிலாப் அமைக்க ரூ.3.40 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 19**

தருமபுரி நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் லாரி டிடிடி81க்கு செல்ப் மோட்டார் பழுதடைந்து விட்டதால் குடிநீர் லாரியினை பயன்படுத்தாத நிலையில் உள்ளது. எனவே, குடிநீர் லாரிக்கு செல்ஃப் மோட்டார் வாங்க 05.02.2018ல் வரப்பெற்ற விலைப் புள்ளியினை கீழ்கண்டவாறு

| | | | |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீவாரி மோட்டடர் ஒர்க்ஸ் தருமபுரி | : | Rs.15,500 |
| 2. | ஜோசப் ஆட்டோ கேரேஜ், தருமபுரி | : | Rs.16,300 |
| 3. | அஜ்மீர் ஆட்டோ கேரேஜ், தருமபுரி | : | Rs.17,200 |

வரிசை எண் 1ல் கண்ட ஸ்ரீவாரி மோட்டார் ஒர்க்ஸ் தருமபுரி அவர்கள் கொடுத்த குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 20**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN29D5924 லாரிக்கு தகுதி சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளதால் வாகனத்தின் பழுதினை சரி செய்யும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் விலைப்புள்ளி கோரியதில் 24.01.2018ம் தேதியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | ஜோசப் ஆட்டோ கேரேஜ் | Rs.49,300/- |
| 2. | அஜ்மிர் ஆட்டோ கேரேஜ் | Rs.51,100/- |
| 3. | ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ் | Rs.45,500/- |

**அலுவலகக்குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.3ல் கண்டுள்ள ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ், தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 21**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN29AM7502 லாரிக்கு தகுதி சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளதால் வாகனத்தின் பழுதினை சரி செய்யும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் விலைப்புள்ளி கோரியதில் 24.01.2018ம் தேதியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | ஜோசப் ஆட்டோ கேரேஜ் | Rs.65,000/- |
| 2. | அஜ்மிர் ஆட்டோ கேரேஜ் | Rs.62,600/- |
| 3. | ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ் | Rs.57,100/- |

**அலுவலகக்குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.3ல் கண்டுள்ள ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ், தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 22**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN29H8946 லாரிக்கு பேட்டரி வாங்கி மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால், வாகனம் ஸ்டாட் செய்வது சிரமமாக உள்ளது. வாகனத்தை தள்ளி இயக்கும் நிலையில் உள்ளது. மேற்படி புதிய பேட்டரி வாங்கிக்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் விலைப்புள்ளி கோரியதில் 02.02.2018ம் தேதியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ் | Rs.11,700/- |
| 2. | அஜ்மிர் ஆட்டோ கேரேஜ் | Rs.12,800/- |
| 3. | ஜோசப் ஆட்டோ கேரேஜ் | Rs.12,200/- |

**அலுவலகக்குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ், தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 23**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN09G1548 லாரிக்கு பேட்டரி வாங்கி இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால், வாகனம் ஸ்டாட் செய்வது சிரமமாக உள்ளது. வாகனத்தை தள்ளி இயக்கும் நிலையில் உள்ளது. மேற்படி புதிய பேட்டரி வாங்கிக்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் 22.01.2018ம் தேதியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | Sri Om Sakthi Automobiles | Rs.12,300/- |
| 2. | Premier Automobiles | Rs.12,900/- |
| 3. | Swastik Automobiles | Rs.13,000/- |

**அலுவலகக்குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள Sri Om Sakthi Automobiles, தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 24**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN29AM8280 லாரிக்கு பிரேக் சிலிண்டர் பழுதாகி விட்டது. புதியதாக பிரேக் மாஸ்டர் சிலிண்டர் வாங்கி பொருத்திக்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் 08.02.2018ம் தேதியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | ஜோசப் ஆட்டோ கேரேஜ் | Rs.5,160/- |
| 2. | அஜ்மிர் ஆட்டோ கேரேஜ் | Rs.5,510/- |
| 3. | ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ் | Rs.4,700/- |

**அலுவலகக்குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.3ல் கண்டுள்ள ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ், தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 25**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN29D5924-க்கு லாரிக்கு பேட்டரி வாங்கி நான்கு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால், வாகனம் ஸ்டாட் செய்வது சிரமமாக உள்ளது. வாகனத்தை தள்ளி இயக்கும் நிலையில் உள்ளது. மேற்படி புதிய பேட்டரி வாங்கிக்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் 22.02.2018ம் தேதியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ் | Rs.11,700/- |
| 2. | அஜ்மிர் ஆட்டோ கேரேஜ் | Rs.12,800/- |
| 3. | ஜோசப் ஆட்டோ கேரேஜ் | Rs.12,200/- |

**அலுவலகக்குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ், தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**தருமபுரி நகராட்சி.**

**2018ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 14.02.2018ம் நாள் புதன் கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட தீர்மான நகல்**

| **பொருள் எண்கள்** | **தீர்மான எண்கள்** | **நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம்** |
|---|---|---|
| பொருள் : 1 | **315** | பதிவு செய்யப்பட்டது |
| பொருள் : 2 முதல் 25 வரை | 316 முதல் 339 வரை | அனுமதிக்கப்பட்டது |

தனிஅலுவலர்(ம) ஆணையாளர்
தருமபுரி நகராட்சி.